RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை நாளிதழ்

சிவகங்கை மலர்-4 இதழ்- 133 மே.19, 2025 திங்கள்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

## 4 நிதி மசோதாக்களுக்கு ஆளுநர் ரவி ஒப்புதல்: கலைஞர் பல்கலை. உட்பட 14 மசோதாக்கள் நிலுவை



சென்னை, மே.19-
சட்டப்பேரவையில் கடந்த ஏப்ரல் 29ம் தேதி நிறைவேற்றி அனுப்பப்பட்ட நிதி தொடர்பான 4 மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார். 14 மசோதாக்கள் அவரிடம் நிலுவையில் உள்ளன.

சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதில் தாமதம் செய்வதாக ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது. இதை விசாரித்த உச்ச நீதிமன்றம், தனது தனிப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்தது. மசோதாக்கள் மீது ஆளுநர் ஒரு மாதத்திலும், குடியரசுத் தலைவர் 3 மாதங்களிலும் முடிவு எடுக்க வேண்டும் என்றும் கெடு விதித்து உத்தரவிட்டது.

இதற்கிடையே, தமிழக சட்டப்பேரவையில் பட்ஜெட் கூட்டத்தொடர் கடந்த மார்ச் மாதம் தொடங்கி, ஏப்ரல் 29ம் தேதியுடன் முடிவடைந்தது. இந்த கூட்டத்தொடரில் நிதி தொடர்பான 4 மசோதாக்கள் உட்பட மொத்தம் 18 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. இவை அனைத்தும் ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டன.

இந்நிலையில், துறைகளுக்கான நிதி ஒதுக்கம், மானிய கோரிக்கைகள் உட்பட நிதி தொடர்பான 4 மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.

நிலுவை மசோதாக்கள்: கும்பகோணத்தில் கலைஞர் பல்கலைக்கழகம் உருவாக்குவது, நிதி நிறுவனங்களின் வலுக்கட்டாய கடன் வசூல் நடவடிக்கைகளில் இருந்து மக்களை பாதுகாப்பது, தமிழ்நாடு கல்வியியல், விளையாட்டு பல்கலைக்கழக துணைவேந்தரை நியமிப்பது நீக்குவதற்கான அதிகாரத்தை அரசுக்கு வழங்குவது, மின்தூக்கிகள், நகரும் மின் படிக்கட்டுகளுக்கு ஆன்லைனில் உரிமம் வழங்குவது, அறிவியல் சார் நில வரைபட அடிப்படையில் தீயணைப்பு நிலையங்களை அமைப்பது தொடர்பான தீயணைப்பு சட்ட திருத்த மசோதா, அனுமதியின்றி உயிரி மருத்துவ கழிவுகளை கொட்டுவோரை தண்டிக்கும் சட்ட மசோதா உள்ளிட்ட 14 மசோதாக்கள் தற்போது ஆளுநரிடம் நிலுவையில் உள்ளன.

## தேசிய கல்விக் கொள்கை இடஒதுக்கீட்டை சிதைத்துவிடும்: முதல்வர் ஸ்டாலின் கருத்து



சென்னை, மே.19-
கல்வியை மாநில பட்டியலுக்கு கொண்டுவருவதற்கான போராட்டத்தை தீவிரப்படுத்த வேண்டும் என்று அமைச்சர் அன்பில் மகேஸ் எழுதிய புத்தக வெளியீட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் எழுதியுள்ள 'தேசிய கல்விக் கொள்கை2020 எனும் மதயானை' நூல் வெளியீட்டு விழா சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் தலைமை விருந்தினராக பங்கேற்ற தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நூலை வெளியிட, சிறப்பு பங்கேற்பாளர்கள் மத்திய பிரதேச முன்னாள் முதல்வர் திக்விஜய் சிங், உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி வெ.கோபால கவுடா ஆகியோர் பெற்று கொண்டனர். அதன்பின் முதல்வர் ஸ்டாலினுக்கு நினைவுப் பரிசாக வேல் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: எப்போதும் கொள்கையை விட்டுத் தரமாட்டோம். தமிழகத்தின் உரிமைக்கு குரல் கொடுப்போம் என்பதற்கு அடையாளம்தான் இந்த புத்தகம். இந்த புத்தகத்தின் தலைப்பே மொத்த கருத்தையும் சொல்லிவிட்டது. இப்படி ஒரு கல்விக்கொள்கையை மத்திய பாஜக அரசு உருவாக்கியபோதே கல்வியில் சிறந்த தமிழகத்தை நாசப்படுத்திட மாட்டோம் என்று அன்றே கருணாநிதி எதிர்த்தார். கருணாநிதியின் வரிகளையே மகேஸ் புத்தகத்தின் தலைப்பாக மாற்றியுள்ளார் .

கல்வியை காவிமயமாக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்டதுதான் கல்விக் கொள்கை. பாஜகவின் திட்டங்கள், எதிர்கால நோக்கங்கள் எல்லாவற்றையும் பார்த்துதான் தேசிய கல்விக் கொள்கையை ஏற்கமாட்டோம் என திட்டவட்டமாக கூறுகிறோம்.

தேசிய கல்விக் கொள்கை இடஒதுக்கீட்டை சிதைத்துவிடும். பன்முக பண்பாட்டை தகர்த்துவிடும். சமஸ்கிருதத்தை கொண்ட ஒற்றை தேசமாக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் ஒரே நோக்கம். தேசிய கல்விக் கொள்கையால் சமஸ்கிருதம் வளரும் என்று சில நாட்களுக்கு முன்பு உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசினார். எது நடக்கும் என்று நாம் தொடர்ந்து எச்சரித்தோமோ, அதை உள்துறை அமைச்சர் உறுதிபடுத்தியுள்ளார். தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளை அழிக்கும் முயற்சி இது.

கல்வியை மீண்டும் மாநில பட்டியலுக்கு கொண்டுவருதான் இதை தடுக்க ஒரே வழி. அதற்கான போராட்டத்தை நாம் தீவிரப்படுத்த வேண்டும். இல்லையெனில் கல்வி எல்லாருக்கும் எட்டாக்கனியாக மாறிவிடும். மும்மொழி கொள்கையை ஏற்காததால் மத்திய அரசு தரவேண்டிய ரூ.2,150 கோடியை வழங்க மறுக்கிறது. எனவே மத்திய அரசுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடர உள்ளோம். இந்த வழக்கிலும் வெற்றி பெறுவோம். இவ்வாறு அவர் பேசினார்.

நாடாளுமன்ற நிலைக்குழு தலைவர் (கல்வி) திக் விஜய் சிங் பேசுகையில், ''தேசிய கல்விக் கொள்கை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவில்லை. மத்திய கல்வி வாரியத்தால் ஒப்புதலும் அளிக்கப்படவில்லை. மாநில அரசு உருவாக்கிய பல்கலைக்கழகங்களைகூட யுஜிசி மூலம் மத்திய அரசு கட்டுப்படுத்த நினைக்கிறது. கல்வி பொதுப்பட்டியலில் இருக்கும்போது, சமக்ர சிக்ஷா திட்டத்தை ஏற்காத மாநிலங்களுக்கு நிதி வழங்க மறுப்பது அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது. கூட்டாட்சி தத்துவத்தை விரும்புவோர் ஒன்றிணைந்து தேசிய கல்விக் கொள்கையை எதிர்ப்போம்'' என்று தெரிவித்தார்.

இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை பேசும்போது, ''மதயானையை அப்படியே விட்டுவிடாமல் அதை சமத்துவ யானையாக மாற்ற ஓர் அங்குசம் தேவை. இந்த புத்தகம் அந்த பணியை செய்ய முயல்கிறது. இந்தியா போன்ற பன்முகத்தன்மையும், பல்வேறு தேசிய இனங்களையும் கொண்ட ஒரு ஜனநாயக நாட்டில் கடந்தகால வரலாறுகளை உள்வாங்கி கூட்டாட்சி தத்துவத்தை அறிந்து மாநில உரிமைகள் பாதிக்கப்படாமல் ஒரு கல்விக் கொள்கையை உருவாக்கியிருக்க வேண்டும். ஆனால், அவற்றை எதையுமே செய்யவில்லை என்பது நூலாசிரியரின் வாதம். பெண் கல்வி பற்றி தேசிய கல்விக் கொள்கையில் அதிகம் பேசப்படவில்லை. கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசு குறைத்துவிட்டதால் அதை தனியார்மயமாக்க முயற்சிக்கிறதோ என்ற சந்தேகம் எழுகிறது'' என்று குறிப்பிட்டார்.

முன்னதாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தனது வரவேற்புரையில், ''நண்பர் அன்பில் மகேஸ் மிகச் சரியான நேரத்தில், முக்கியமான இந்த புத்தகத்தை அவர் கொண்டு வந்துள்ளார். கல்வியை காவிமயமாக்க துடிக்கும் பாசிஸ்ட்களை நேருக்கு நேர் நின்று எதிர்க்கும் காலக்கட்டத்தில் தற்போது நமது கல்வித்துறை இருக்கிறது. இந்த சவாலான சூழல்களை சாதனைகளாக அவர் மாற்றி வருகிறார். தேசியக் கல்வி கொள்கையை எதிர்த்து தமிழகம் போராடும். அதற்கு சிறந்த ஆயுதமாக இந்த புத்தகம் விளங்கும். இதை மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரிடமும் கொண்டு சேர்க்க வேண்டும்'' என்றார்.

அமைச்சர் அன்பில் மகேஸ் தனது ஏற்புரையில், ''ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டத்தில் 20 நோக்கங்கள் உள்ளன. அதில் 19ல் தமிழகம் முன்னிலையில் உள்ளது. ஆனால், நமக்கு நிதி வழங்கப்படவில்லை. அதேநேரம் குறைந்த நோக்கங்களை அடைந்த குஜராத், மகராஷ்டிரா, பீகார் உள்ளிட்ட மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கல்விக்கொள்கை மதத்தின் கோட்பாடுகளை கல்வித் துறையில் திணிக்க முயல்வதை ஏற்க முடியாது. இதை பொதுமக்களிடம் சொல்வதற்காக இந்த புத்தகத்தை எழுதியுள்ளேன். அதிலுள்ள பாதிப்புகளை விரிவாக கூறியுள்ளேன்'' என்றார்.

## ஹைதராபாத்தில் பயங்கர தீ விபத்து: 17 பேர் பலி; பலர் படுகாயம்

ஹைதராபாத், மே.19-
ஹைதராபாத்தில் புகழ்பெற்ற சார்மினார் நினைவுச் சின்னம் அருகே உள்ள ஒரு கட்டிடத்தில் தீ விபத்து ஏற்பட்டது. இதில் 17 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்துள்ளனர். மின்கசிவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரிகிறது.

இந்த விபத்து குறித்து தீயணைப்புத் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "அதிகாலை 6.30 மணியளவில் தீ விபத்து குறித்து தகவல் வந்தது. உடனடியாக அங்கு விரைந்தோம். தீயணைப்பில் 11 தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டன. பலர் உயிரிழந்தனர். சிலரைக் காயங்களுடன் மீட்டோம். அவர்கள் மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப் பட்டனர்." என்றார்.

மத்திய அமைச்சர் ஜி கிஷன் ரெட்டி, "சார்மினார் நினைவுச் சின்னம் அருகே நகைக் கடைகள் அதிகம் நிறைந்த குல்சார் ஹவுஸ் பகுதியில் ஒரு நகைக் கடைக்கு மேல் உள்ள வீட்டில் உள்ளோர் இந்த விபத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை நான் நேரில் சந்தித்தேன். இது ஒரு துயரச் சம்பவம். இந்த விபத்து தொடர்பாக நான் யாரையும் குறைகூற விரும்பவில்லை. ஆனால் காவல்துறையினர், நகராட்சி, தீயணைப்புத் துறையினர் என அனைவரும் எப்போதும் முழு பலத்துடன் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இன்று இந்த விபத்தில் வேகமாக செயல்பட, தீயணைப்புத் துறையிடம் போதிய உபகரணங்கள் இல்லை என்ற தகவலை அறிந்தேன். எதிர்காலத்தில் இதுபோன்ற துறையில் தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டும். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவி பெற்றுத் தருவது குறித்து நான் பிரதமர் நரேந்திர மோடியிடம் பேசவிருக்கிறேன்." என்றார்.

முதல்வர் ரேவந்த் ரெட்டி, இந்த விபத்து குறித்து அதிர்ச்சியை வெளிப்படுத்தியதோடு, காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கிட உத்தரவிட்டுள்ளதாகக் கூறினார்.

தெலங்கானா அமைச்சர் பொன்னம் பிரபாகர், "விபத்தில் உயிரிழந்தோரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. விரைவில் முழுத் தகவலையும் அரசு பகிரும்." என்றார்.

பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "ஹைதராபாத் தீ விபத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து வேதனை அடைகிறோம். தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். காயமடைந்தோர் விரைவில் குணமடையட்டும். பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம் நிவாரணம் வழங்கப்படும். காயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரம் வழங்கப்படும்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டிக்கெட் எடுக்காமல் முன்பதிவு பெட்டியில் பயணித்தால் உடனடி அபராதம்

டெல்லி, மே.19-
டிக்கெட் எடுக்காமல் முன்பதிவு பெட்டிகளில் செல்வோருக்கு உடனடி அபராதம் விதித்து ரயில்வே பாதுகாப்பு படை குழுவினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். முன்பதிவு செய்யாத பயணிகளும், திடீரென முன்பதிவு பெட்டிகளில் ஏறி பயணிக்கின்றனர். இதனால் முன்பதிவு செய்தவர்கள் பெரும் அவதிக்கு ஆளாக நேரிடுகிறது. இதனை தடுப்பதற்காகவும், கண்காணிப்பதற்காகவும், சிறப்பு குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கிறது. இதர பயணியர் பயணம் செய்வதை தடுக்கவே இந்த குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. விரைவு ரயில்களில், டிக்கெட் பரிசோதகர்கள் குழுவினர், திடீர் திடீரென சோதனைகளை நடத்தி கொண்டிருக்கிறார்கள்.

சென்னை டூ கோவை, திருச்சி, மதுரை வழித்தடங்களில் செல்லும் ரயில்களில், ரயில்வே பாதுகாப்பு படை குழுவினரும் சோதனை நடத்தி வருகிறார்கள். ஒவ்வொரு குழுவிலும் 3 பேர் உள்ளனர். அதில் 2 பாதுகாப்பு படையினருடன் ஒரு டிடிஆரும் உள்ளனர். ரிசர்வ் பெட்டிகளில், யாராவது, முன்பதிவு செய்யாதவர்களும் ஏறி விடுகிறார்களா, பெட்டிகளை ஆக்கிரமித்துவிடுகிறார்களா என்பதை கண்காணிக்கிறார்கள். அப்படி யாராவது ஆக்கிரமித்திருந்தால் அந்த பயணிகளுக்கு அந்த இடத்திலேயே அபராதமும் விதிக்கிறார்கள். அவர்களிடம் உரிய டிக்கெட் இல்லை என்றால், கீழே இறக்கி விடப்பட்டு, முன்பதிவு இல்லாத பெட்டிகளுக்கு செல்ல அறிவுறுத்தப்படுகின்றனர். டிக்கெட்டே இல்லாமல் வருவோருக்கு ரூ.500 அபராதம் விதிக்கப்படுகிறது. ரயில்வே பாதுகாப்பு படையின் இந்த அதிரடியானது முன்பதிவு செய்த பயணிப்போருக்கு நிம்மதியை ஏற்படுத்தியுள்ளது.

## ஆளில்லாத போலி போர் விமானங்கள் மூலம் பாகிஸ்தானை ஏமாற்றிய இந்திய ராணுவம்



டெல்லி, மே.19-
ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின்போது ஆளில்லாத போலி போர் விமானங்கள் மூலம் பாகிஸ்தான் ராணுவத்தை இந்திய ராணுவம் எளிதாக ஏமாற்றி உள்ளது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடியாக, ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் கடந்த 7ம் தேதி பாகிஸ்தானின் 9 தீவிரவாத முகாம்களை இந்திய விமானப்படை அழித்தது. இதன்பிறகு கடந்த 7,8, 9, 10 ஆகிய தேதிகளில் இந்தியா, பாகிஸ்தான் இடையே மிகப்பெரிய போர் நடைபெற்றது.

கடந்த 9ம் தேதி நள்ளிரவில் பாகிஸ்தானின் 11 விமானப் படை தளங்களை, இந்திய போர் விமானங்கள் பிரம்மோஸ், ஸ்கால்ப் உள்ளிட்ட ஏவுகணைகள் மூலம் அழித்தன. இந்த தாக்குதல் குறித்து இந்திய பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் கூறியதாவது:

பாகிஸ்தானின் ட்ரோன், போர் விமானங்களின் தாக்குதலை முறியடிக்க அந்த நாட்டின் விமான படை தளங்களை அழிக்க முடிவு செய்யப்பட்டது. இதற்காக கடந்த 9ம் தேதி நள்ளிரவில் லட்சியா என்ற ஆளில்லா ட்ரோன்கள் பாகிஸ்தான் விமான படை தளங்கள் மீது பறக்க விடப்பட்டன.

இந்த ட்ரோன்கள் சுகோய், மிக் 29 ரக போர் விமானங்கள் போன்று தத்ரூபமாக தயார் செய்யப்பட்டு இருந்தன. இவை உண்மையான போர் விமானங்கள் என்று நம்பிய பாகிஸ்தான் விமானப்படை அனைத்து வான் பாதுகாப்பு கவசங்களையும் ஒரே நேரத்தில் இயக்கியது.

லட்சியா ட்ரோன்களை குறிவைத்து பாகிஸ்தான் ராணுவமும் விமானப் படையும் இணைந்து தரை, வான் வழியாக பல்வேறு ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தின. ஆனால் மணிக்கு 850 கி.மீ. வேகத்தில் பறக்கும் திறன்கொண்ட லட்சியா ட்ரோன்களை பாகிஸ்தான் விமானப் படையால் சுட்டு வீழ்த்த முடியவில்லை. இந்தியாவின் போலி போர் விமானங்களுடன் பாகிஸ்தான் போர் விமானங்கள் மிக தீவிரமாக போரிட்டு கொண்டிருந்தன. அந்த நாட்டு ராணுவம் மற்றும் விமானப் படையின் முழு கவனமும் லட்சியா ட்ரோன்கள் மீது இருந்தன.

இந்த நேரத்தில் இந்திய எல்லைப் பகுதிகளில் இருந்து சுகோய், ரஃபேல் போர் விமானங்கள் பாகிஸ்தான் விமான படைத் தளங்களை குறிவைத்து சக்திவாய்ந்த ஏவுகணைகளை வீசின.

சுகோய் போர் விமானங்களில் இருந்து அடுத்தடுத்து சீறிப் பாய்ந்த 15 பிரம்மோஸ் ஏவுகணைகள் பாகிஸ்தான் விமான படை தளங்களை துல்லியமாக தாக்கி அழித்தன. இதேபோல ரஃபேல் போர் விமானங்களில் இருந்து சீறிப் பாய்ந்த ஸ்கால்ப் ஏவுகணைகள் பாகிஸ்தான் விமான படை தளங்களை துவம்சம் செய்தன.

இதில் பாகிஸ்தானின் 11 விமான படை தளங்கள் மிகக் கடுமையாக சேதமடைந்தன. ஏராளமான போர் விமானங்கள் அழிந்தன. ஓடுதளங்களில் ராட்சத பள்ளங்கள் ஏற்பட்டதால் எந்தவொரு போர் விமானத்தையும் இயக்க முடியாத சூழல் எழுந்தது.

மேலும் லட்சியா ட்ரோன்கள் மூலம் பாகிஸ்தானின் வான் பாதுகாப்பு கவசங்கள் எந்தெந்த இடங்களில் உள்ளன என்பது மிகத் துல்லியமாக கண்டறியப்பட்டது. இதன்மூலம் அந்த நாட்டின் எச்கியூ9 என்ற வான் பாதுகாப்பு கவசங்களும் முழுமையாக அழிக்கப்பட்டன. இவ்வாறு இந்திய பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.





# கொடைக்கானலில் 62வது மலர் கண்காட்சி: மே 24 தொடங்கி 9 நாட்கள் நடைபெறுகிறது

திண்டுக்கல், மே.19-

கொடைக்கானலில் கோடை விழா மற்றும் மலர் கண்காட்சி மே 24ல் தொடங்கி ஜூன் 1ம் தேதி வரை 9 நாட்கள் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கோடை வாசஸ்தலமான மலைகளின் இளவரசி கொடைக்கானலுக்கு கோடை சீசன் தொடங்கியது முதல் சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்து காணப்படுகிறது. கடந்த சில தினங்களாக கொடைக்கானலில் மாலை வேளையில் தொடர்ந்து மழை பெய்துவருவதால் மலைப்பகுதியில் இயற்கை எழில் காட்சிகள், நீர்வீழ்ச்சிகளில் தண்ணீர் கொட்டுவது என சுற்றுலாபயணிகளை கவரும் வகையில் ரம்மியமாக காட்சியளிக்கிறது.

பிரையண்ட் பூங்காவில் மலர் கண்காட்சி தொடங்குவதற்கு முன்பே பல்வேறு வண்ணங்களில் பூக்கள் பூத்துக்குலுங்க தொடங்கிவிட்டன. இந்நிலையில் கொடைக்கானலில் கோடைவிழா, மலர்கண்காட்சி நடத்துவது குறித்து மாவட்ட நிர்வாகம், தோட்டக்கலைத்துறை, சுற்றுலாத்துறை சார்பில் கலந்தாய்வுக் கூட்டம் கொடைக்கானலில் நடைபெற்றது. திண்டுக்கல் ஆட்சியர் செ.சரவணன் தலை மையில் நடந்த கூட்டத்தில் தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் நடராஜன், சுற்றுலாத்துறை அலுவலர் கோவிந்தராஜ் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

கூட்ட முடிவில் ஆட்சியர் செ.சரவணன் செய்தியாள ர்களிடம் கூறுகையில், "கொடைக்கானலில் கோடை விழா, மலர்கண்காட்சி மே 24 தொடங்கி ஜூன் 1ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

கோடை விழாவை முன்னிட்டு சுற்றுலா பயணிகள் பங்கேற்கும் வகையில் பரதநாட்டியம், சிலம்பம், விளையாட்டு போட்டிகள், படகுப் போட்டி, நாய்கள் கண்காட்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மலர் கண்காட்சியை காண நுழைவுக் கட்டணமாக பெரியவர்களுக்கு ரூ.75, சிறியவர்களுக்கு ரூ.35 என கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. மலர் கண்காட்சியில் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, உணவு மற்றும் உணவு வழங்கல் துறை, சுற்றுலாத்துறை அமைச்சர்கள் பங்கேற்க உள்ளனர்." என்றார்.

# வார்ப்பட தொழில்துறை வளர்ச்சிக்கு உதவும் மின்சார வாகனங்கள்: கோவை தொழில்துறையினர் தகவல்

கோவை, மே.19-

மின்சார வாகனங்களின் தேவை அதிகரித்து வருவது வார்ப்பட தொழில்துறை சிறப்பான வளர்ச்சியை பெற வாய்ப்பை ஏற்படுத்தி தந்துள்ளது என்றும் டிராக்டர், கார் துறைகளில் இருந்து பணி ஆணைகள் அதிகளவு பெறப்படுவதாக கோவை தொழில்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்திய உற்பத்தித் துறையில் வார்ப்படம் (casting) தொழில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. நாட்டின் பொருளாதாரம் மற்றும் மொத்த வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை கொண்டுள்ளது. உலக அளவில் மிக அதிகளவு வார்ப்படம் உற்பத்தி செய்யும் நாடு என்ற பெருமையை இந்தியா கொண்டுள்ளது. நாடு முழுவதும் 5,000 வார்ப்படம் உற்பத்தி தொழில் நிறுவனங்கள் உள்ளன. இவற்றின் மூலம் ஆண்டுதோறும் 9 மில்லியன் மெட்ரிக் டன் எடையிலான வார்ப்படம் உற்பத்தி செய்யப்படுகிறது. போதிய அளவு மூலப்பொருட்கள் இருப்பு, திறன்வாய்ந்த தொழிலாளர்கள் இவை எல்லாவற்றுக்கும் மேல்



உள்நாட்டு சந்தையில் வார்ப்படம் தேவை அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் தொழில் நிலையான வளர்ச்சியை பெற்றுள்ளது.

இதுகுறித்து 'தி இன்ஸ்டியூட் ஆப் இந்தியன் பவுண்டரிமென்'(ஐஐஎப்) தேசிய பொருளாளர் முத்துக்குமார் கூறியதாவது: பல்வேறு துறைகளுக்கு வார்ப்படம் முக்கிய மூலப்பொருளாக பயன்படுத்துப்படும் போதும், ஆட்டோ மொபைல் துறை தான் மிக அதிக அளவு வார்ப்படத்தை பயன்படுத்துகிறது. அதை தொடர்ந்து உள்கட்டமைப்பு, ரயில்வே, விண்வெளி உள்ளிட்ட பிற துறைகளில் வார்ப்படம் அதிகம் பயன்படுகிறது. மின்சார வாகனங்களின் தேவை அதிகரித்து வருவது வார்ப்பட தொழில்துறை சிறப்பான வளர்ச்சியை பெற வாய்ப்பை ஏற்படுத்தி தந்துள்ளது. மிக குறைந்த எடை, ஆனால் மிக வலிமை கொண்ட பொருட்கள் தயாரிக்க வார்ப்படம் உதவுகின்றன.

மற்ற துறைகளைப்போல் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் வார்ப்படம் தொழில்துறையிலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. முன்பு பின்பற்றி வந்த பழைய நடைமுறைகளுக்கு மாற்றாக அதிக தரம், நிலைத்தன்மை, திடத்தன்மை கொண்டு பொருட்கள் உற்பத்தி செய்ய உதவுகின்றன. உலகளவில் மந்தநிலை காணப்படும் நிலையிலும் இந்திய வார்ப்படம் தொழில் நிறுவனங்களுக்கு உள்நாட்டில் அமல்படுத்தப்படும் 'மேக் இன் இந்தியா', 'தேசிய இன்ப்ராஸ்டரக்சர் பைப்லைன்' (என்ஐபி) போன்ற திட்டங்கள் வார்ப்பட தொழில் நிறுவனங்களுக்கு பணி ஆணைகள் தொடர்ந்து கிடைப்பதை உறுதிப்படுத்துகின்றன.

பசுமை திட்டங்கள் அதிக முக்கியத்துவம் அளித்து செயல்படுத்தப்படும் சூழலில் இந்திய வார்ப்பட நிறுவனங்களும் மறுசுழற்சி நடைமுறைகளை பின்பற்றுதல், கார்பன் வாயு வெளியிடும் அளவை குறைத்தல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல தொடங்கியுள்ளன. திறன் மேம்பாட்டு திட்டங்களுக்கு மத்திய, மாநில அரசு சார்பில் அளிக்கப்படும் முக்கியத்துவம், நிதியுதவி போன்றவை தொடர வேண்டும். உலகளவில் வார்ப்பட தேவை அதிகரித்து வருவதால் எதிர்வரும் காலங்களில் இந்தியாவில் உள்ள நிறுவனங்களுக்கு ஏற்றுமதி அதிகம் செய்ய வாய்ப்பு கிடைக்கும்.

வளர்ச்சிக்கு சாதகமான சூழல் வார்ப்பட தொழில் துறையில் காணப்படும் போதும் மாறி வரும் சட்டங்கள் மற்றும் சந்தை தேவைகளுக்கு ஏற்ப இந்திய வார்ப்பட தொழில் துறையினர் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போது தான் உலகளவில் காணப்படும் போட்டியை தொடர்ந்து திறமையாக எதிர்கொள்ளும் பக்குவத்தை பெற முடியும். இவ்வாறு முத்துக்குமார் தெரிவித்தார்.

'தி இன்ஸ்டியூட் ஆப் இந்தியன் பவுண்டரிமென்'(ஐஐஎப்) கோவை கிளை முன்னாள் தலைவர் விஸ்வநாதன் கூறும்போது, "கார் உற்பத்தித்துறையில் இருந்த வார்ப்படம் பணி ஆணைகள் இயல்பு நிலைக்கு திரும்பி யுள்ளன. டிராக்டர் உற்பத்தித் துறையில் அதிக பணி ஆணைகள்(80 சதவீதம் வரை) பெறப்படுகின்றன. மோட்டார் பம்ப்செட் உற்பத்தித்துறையில் பணி ஆணைகள் மிகவும் குறைந்துள்ளது. தற்போது 40 சதவீதம் மட்டுமே அத்துறையில் இருந்து வார்ப்பட தொழில் நிறுவனங்களுக்கு பணி ஆணைகள் பெறப்படுகின்றன." என்றார்.

# அரசு பள்ளி மாணவர்களின் ஆங்கில மொழி திறன்களை மேம்படுத்த 'லெவல் அப்' திட்டம்

சென்னை, மே.19-

தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறை, தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் மாண வர்களின் அடிப்படை திறன்களை மேம்படுத்தும் நோக்கத்தில், 'திறன்கள்' எனும் திட்டத்தை அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டத்தால் மாணவர்களின் அடிப்படை திறனில் முன்னேற்றங்கள் காணப்ப ட்டாலும், தேசிய அளவிலான 'ஏசர்' மற்றும் 'என்.ஏ.எஸ்' ஆகியவற்றின் திறன் ஆய்வு முடிவுகளில், அரசு பள்ளி மாணவர்கள் வகுப்புக்கேற்ற மொழி திறன்களை கொண்டிரு ப்பதில் குறைபாடுகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையில், மாணவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக, அரசு பள்ளிகளில் பணியாற்றும் பல ஆசிரியர்கள், தன்னார்வத்தோடு கற்பித்தல் வழிமுறைகளை உருவாக்கி பயன்படுத்தியும் வருகின்றனர்.

இப்படி, மாணவர்களின் அடிப்படை மொழி திறன்களை வளர்க்கும் வகையில் சில ஆசிரியர்கள் மேற்கொள்ளும் கற்பித்தல் நுட்பங்களை, பிற ஆசிரியர் அறிந்துக் கொள்ளும் வகையில், அவற்றை மொழி வள வங்கியாக உருவாக்க பள்ளிக்கல்வித்துறை திட்டமிட்டுள்ளது. அதே போல, மாணவர்களின் மொழி திறன்களை மேம்படுத்திட ஒரு புதிய முன்னெடுப்பாக 'லெவல் அப்' எனும் தன்னார்வ திட்டத்தையும் பள்ளிக்கல்வித்துறை அறிமுகம் செய்துள்ளது. அரசு பள்ளிகளில் 6 முதல் 8ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களின் ஆங்கில மொழி வாசித்தல், பேசுதல், எழுதுதல் ஆகிய அடிப்படை திறன்களை மாணவர்கள் எளிதாக கற்றுக் கொள்வதே இந்த திட்டத்தின் நோக்கம் என பள்ளிக்கல்வித்துறை தெரிவித்துள்ளது.

வாட்ஸ் அப் குழு மாணவர்களின் மொழித்திறனை மேம்படுத்தும் ஆசிரியர்களை மாவட்டம் தோறும் அடையாளம் கண்டு, 'லெவல் அப்' புலன் குழு எனும் வாட்ஸ் அப் குழுவையும் அமைக்க பள்ளிக்கல்வித்துறை திட்டமிட்டுள்ளது. இதன்மூலம், ஆசிரியர்கள் தங்களின் கற்பித்தல் வழிமுறைகள் தொடர்பான பதிவுகளை பகிர்ந்துக் கொள்ள முடியும் என பள்ளிக்கல்வித்துறை கூறியுள்ளது. வருகிற ஜூன் மாதம் டிசம்பர் மாதம் வரையில் ஒவ்வொரு மாதத்திற்கும் மாணவர்கள் அடைய வேண்டிய குறைந்தபட்ச மொழி திறன் இலக்குகள் நிர்ணயித்து, இந்த ஆசிரியர்கள் அடங்கிய குழு செயல்பட உள்ளதாக பள்ளிக்கல்வித்துறை தெரிவித்துள்ளது.



## மீன்பிடி தடை காலம் எதிரொலி; படகுகள் பழுது நீக்கம், வலைகள் சீரமைப்பில் மீனவர்கள் மும்முரம்

நாகை, மே.19-

மீன்பிடி தடைக்காலத்தையொட்டி மீனவர்கள் விசைப்படகுகளை பழுது நீக்குதல் மற்றும் வலைகள் சீரமைப்பு பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள். தமிழகத்தில் கிழக்கு கடற்கரையில் மீன்களின் இனப் பெருக்க காலத்தை கணக்கில் கொண்டு ஏப்ரல் மாதம் 15 ம் தேதி முதல் மீன்பிடி தடைக்காலம் அமலில் உள்ளது. இதனால் விசைப்படகு மீனவர்கள் ஓய்வில் இருந்து வருகின்றனர். 60 நாட்கள் இந்த தடைக்காலம் நீடிக்கும்.

தமிழகத்தில் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடலுக்கு செல்லவில்லை. நாகை மாவட்டத்தில் 60க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் பாதுகாப்பாக கரையேற்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தடைகாலத்தை முன்னிட்டு நாகை மீன்பிடி துறைமுகம், கடுவையாறு பகுதிகளில் இன்ஜின் பழுது நீக்கம், படகு சீரைமத்தல், வலைகள் மற்றும் மீன்பிடி சாதனைங்களை பழுது நீக்கம் செய்தல், படகுகளில் வர்ணம் அடித்தல் போன்ற பணிகள் நடைபெறுகிறது.

இப்பணியில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இரவு பகலாக ஈடுபட்டு வருகின்றனர். ஒரு படகினை பழுது நீக்கி மராமத்து பணிகள் மேற்கொள்ள ஒரு வாரத்தில் இருந்து 10 நாட்கள் ஆகும். படகு ஒன்றுக்கு ரூ. 3 லட்சத்தில் இருந்து ரூ. 5 லட்சம் வரை செலவாகும் என்று மீனவர்கள் கூறினர். மீன்பிடி உபகரணங்களை சீரமைக்க ஏற்படும் செலவுகளை ஒன்றிய அரசு மானியத்தில் வங்கி கடனாக வழங்கினால் நன்றாக இருக்கும் என்றும் தெரிவித்தனர்.

# 18 ஆயிரம் அடி உயரம் கொண்ட எவரெஸ்ட் பேஸ் கேம்ப் அடைந்து தமிழ்நாட்டு சிறுமி சாதனை

நெல்லை, மே.19–

நெல்லையைச் சேர்ந்த 6 வயது சிறுமி லலித் ரேணு, உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தின் அடிவாரமான 18 ஆயிரம் அடி உயர பேஸ் கேம்பை அடைந்து சாதனை படைத்துள்ளார். இதன் மூலம், எவரெஸ்ட் பேஸ் கேம்பை அடைந்த முதல் தமிழ்நாட்டு சிறுமி என்ற பெருமையை பெற்றுள்ளார்.



தமிழ்நாட்டில் இருந்து இதுவரை 8 வயதுக்குட்பட்ட எந்த குழந்தையும் எவரெஸ்ட் பேஸ் கேம்ப் சென்றதில்லை. இந்நிலையில், நெல்லை ராமையன்பட்டியை சேர்ந்த லலித் ரேணு (6), முதன்முறையாக இந்த சாதனையை நிகழ்த்தி தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். லலித்ரேணு தாழையூத்தில் உள்ள தனியார் பள்ளியில் முதலாம் வகுப்பு படித்து வருகிறார்.

லலித் ரேணுவுக்கு மலையேற்றம் என்பது, அவரது குடும்பத்தில் பாரம்பரியமாக கடைபிடிக்கப்பட்ட பழக்கமாக அறிமுகமாகி உள்ளது. அவரது தந்தை ஸ்ரீதர் வெங்கடேஷ், சென்னையில் ஐடி நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். சிறுவயது முதலே மலையேற்றத்தில் ஆர்வம் கொண்ட ஸ்ரீதரும், அவரது மனைவி அபர்ணாவும், லலித் ரேணுவையும் மலைகளுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இதன் விளைவாக, இரண்டரை வயதில் வெள்ளியங்கிரி மலையில் ஏறத் தொடங்கிய லலித் ரேணு, தற்போது எவரெஸ்ட் பேஸ் கேம்ப் வரை சென்று வந்துள்ளார். சிறுமி லலித் ரேணு இதுவரை சபரிமலை, வெள்ளியங்கிரி மலை, பருவதமலை, ராமர் மலை, தோரணமலை, சதுரகிரி மலை, பத்ரிநாத், நம்பிக்கோயில் மலை, செண்பகாதேவி அருவி, ஹரிஹர் போர்ட், கேதார்நாத் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட மலைகளில் ஏறி இறங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நேபாளத்தில் 18 ஆயிரம் அடி உயரத்தில் அமைந்துள்ள எவரெஸ்ட் பேஸ் கேம்பை அடைவது சாதாரண காரியமல்ல. 130 கிமீ தூரம் கொண்ட இந்த மலையேற்ற பயணத்தை லலித் ரேணு 13 நாட்களில் நிறைவு செய்துள்ளார். இதில் 8 முதல் 9 நாட்கள் ஏறுவதற்கும், 4 நாட்கள் இறங்குவதற்கும் எடுத்துக் கொண்டார். தனது 6வது வயதில் இந்த கடினமான இலக்கை எட்டிய சிறுமி லலித் ரேணுவின் இந்த சாதனையை பல்வேறு தரப்பினரும் பாராட்டி வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# தமிழகத்தில் மே.20 வரை கனமழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்

சென்னை, மே.19–

தமிழகத்தில் மே., 18,19,20 ஆகிய தேதி களில் கனமழை பெய்ய வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில், "தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு வளி மண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. கர்நாடக கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள மத்திய கிழக்கு அரபிக்கடலில் வருகின்ற 21ஆம் தேதி வாக்கில் ஒரு வளி மண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகக்கூடும்.

இதன் காரணமாக, 22ஆம் தேதி வாக்கில், அதே பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகக்கூடும். பிறகு இது வடக்கு திசையில் நகரக்கூடும்.

தமிழக மற்றும் அதனை ஒட்டிய வடக்கு கேரள பகுதிகளின் மேல் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதனால், இன்று (மே.18) ஆம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல், தேனி, ஈரோடு, தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திருப்பத்தூர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

(மே., 19) ஆம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

(மே., 20) ஆம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல், தேனி, ஈரோடு, தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை, கரூர்,



நாமக்கல் மற்றும் திருச்சி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும், கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. மே.,21 முதல் 24 வரை: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

அதிகபட்ச வெப்பநிலை பற்றிய முன்னறிவிப்பு: அதிகபட்ச வெப்பநிலை மாறுதலின் போக்கு: (மே., 18) ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் பொதுவாக பெரிய மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு. மே., 21, 22 ஆம் தேதிகளில் தமிழகத்தில் ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை 24கு செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும்.

இயல்பு நிலையிலிருந்து அதிகபட்ச வெப்ப அளவின் வேறுபாடு: மே.,18 முதல் 20 வரை: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை $24^{\circ}$ செல்சியஸ் இயல்பை விட குறைவாக இருக்கக்கூடும். மே.,21, 22 ஆம் தேதிகளில் தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டி இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு: இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 36 $37^{\circ}$ செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 2728$^{\circ}$ செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 34 $35^{\circ}$ செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27-28$^{\circ}$ செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: தமிழக கடலோரப்பகுதிகள்: மே.,18 முதல் 22 வரை: தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

வங்கக்கடல் பகுதிகள்: மே.,18, 19 ஆம் தேதிகளில் தென்மேற்கு வங்கக்கடலில் ஒருசில பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். மே 20 முதல் 22 வரை: எச்சரிக்கை ஏதுமில்லை.

அரபிக்கடல் பகுதிகள்: மே., 18 முதல் 20 வரை: கர்நாடக - கேரள கடலோரப்பகுதிகள் மற்றும் லட்சத்தீவு பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

மே., 21 மற்றும் மே.,22 ஆகிய தேதிகளில் கர்நாடக - கேரள கடலோரப்பகுதிகள், மத்தியகிழக்கு அரபிக்கடல் பகுதிகள் மற்றும் லட்சத்தீவு பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.




# மதுரை மக்களின் பாசம் என்றைக்கும் மாறாது விஷால் நெகிழ்ச்சி

மதுரை, மே.19-

பாசம், உணவு விஷயத்தில் மதுரை மக்கள் மாறமாட்டார்கள் என, நடிகர் விஷால் கருத்து கூறினார்.

நடிகர் விஷால் ரசிகர் மன்ற செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் சதீஷ்குமார் என்பவரின் திருமணம் மதுரை திருமங்கலத்தில் இன்று நடந்தது. இதில் பங்கேற்பதற்காக நடிகர் விஷால் மதுரை வருகை தந்தார். அவர் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார்.

பிறகு அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ரசிகர் மன்ற நிர்வாகியின் திருமணத்திற்காக மதுரை வந்தேன், மதுரைக்கு வந்தால் மீனாட்சி அம்மன் கோயிலுக்கு போகாமல் எப்படி ஊருக்கு போக முடியும். எங்கள் அம்மா வீட்டுக்குள் சேர்க்கமாட்டார். எங்கள் அம்மா கொடுத்த புடவையை அம்மனுக்கு கொடுத்து தரிசித்தேன். 2006ல் ' திமிரு' திரைப்பட படப்பிடிப்புக்கு பிறகு 19 ஆண்டுக்கு கழித்து தற்போது வந்துள்ளேன். மதுரை மக்கள் என்னை கைவிட்டுவிட மாட்டார்கள். நானும் மதுரைக்காரன் தான்.

நடிகர் சங்க கட்டிடம் தாமதத்திற்கு காரணம் நான் இல்லை. 6 மாதத்தில் முடிக்க வேண்டியது. நடிகர் சங்கம் தேர்தல் விவகாரத்தால் 3 ஆண்டுகள் தாமதமாகியது. இன்னும் நான்கு மாதத்தில் கட்டிடம் பெரிதாகிவிடும்.

இந்தியா பாகிஸ்தான் போர் தேவையில்லாதது. இதை தவிர்த்து இருக்கலாம். மக்களை பாதுகாக்கும் ராணுவ வீரர்கள் உயிரிழக்கும்போது வருத்தமாக இருக்கிறது. எல்லா நாட்டுக்கும் எல்லைகள் போடப்பட்டுள்ளன. இதைபுரிந்து கொண்டு செயல்பட்டால் போரே தேவையில்லை.

மதுரை மக்கள் ஒரு விஷயத்தில் மாறவே மாட்டார்கள். ஒன்று பாசம், மற்றொன்று உணவு. இவ்விரண்டு விஷயத்திலும் மாறவே மாட்டார்கள். நூறு ஆண்டு கழித்து வந்தாலும் அதே பாசம், சிரிப்பு மதுரைக்காரர்களிடம் இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# ராமேசுவரத்தில் ஹெலிபேட் தளம் அமைப்பது எப்போது? தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தகவல்

ராமேசுவரம், மே,19–

“ராமேசுவரத்தில் ஹெலிபேட் தளம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பான அறிக்கை கிடைத்தவுடன் ஹெலிகாப்டர் இயக்குவது தொடர்பாக முடிவு செய்யப்படும்,” என தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் ஷில்பா பிரபாகர் சதீஷ் தெரிவித்தார்.

தேசிய அளவில் பிரசித்தி பெற்ற ஆன்மிக தலம் மற்றும் முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றான ராமேசுவரத்துக்கு தினசரி ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். இங்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு சுற்றலாத்துறை பல்வேறு சுற்றுலாத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில் இன்று, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் ஷில்பா பிரபாகர் சதீஷ், ராமேசுவரத்தில் சுற்றுலாத்துறை சார்பில்



செய்யப்பட்ட பணிகள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு செய்யப்பட வேண்டிய மேம்பாட்டு பணிகள் குறித்து, மாவட்ட சுற்றுலா துறை அலுவலர் நித்யா மற்றும் ராமேசுவரம் வருவாய்த்துறை அலுவலர்களுடன் சுற்றுலா இடங்களை பார்வையிட்டார்.

முன்னதாக, அக்னி தீர்த்த கடற்கரை செல்லும் வழியில் உள்ள வாகன நிறுத்தம், தனுஷ்கோடி செல்லும் வழியில் சுற்றுலாத்துறை சார்பில் ஹெலிபேட் தளம் அமைய உள்ள இடம், தனுஷ்கோடி பழைய தேவாலயம், அரிச்சல் முனை, அரியமான் கடற்கரை, ராமேசுவரம் பேருந்து நிலையம் அருகே உள்ள ஆலயம் என்ற விடுதி, மண்டபத்தில் உள்ள சுற்றுலாத் துறைக்கு சொந்தமான பயனற்ற நிலையில் உள்ள தங்கும் விடுதி உள்ளிட்டவற்றை பார்வையிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் ஷில்பா பிரபாகர் சதீஷ் கூறும்போது, “ராமேசுவரம் வரும் சுற்றுலாப் பயணிகளின் தேவைகள் என்ன என்பது குறித்து அறிந்து கொள்வதற்காகவும், இங்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கான தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அரசிடம் முக்கிய திட்டம் உள்ளது.

தனுஷ்கோடி செல்லும் வழியில் சுற்றுலாத்துறை சார்பில் ஹெலிபேட் தளம் அமைப்பது தொடர்பாக சாத்தியக்கூறுகளுக்கு அறிக்கை வந்த பின்னர் பணிகள் தொடங்குவது குறித்து முடிவு செய்யப்படும்.

மேலும் ராமேசுவரம் தீவு மற்றும் தனுஷ்கோடி கடற்கரை ஒழுங்குமுறை ஆணையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதால் தனுஷ்கோடி பழைய தேவாலயத்தை சுற்றிப் பார்க்க வரும் சுற்றுலா பயணிகள் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வது தொடர்பாக கடற்கரை ஒழுங்குமுறை ஆணையத்திடம் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளோம். அனுமதி கிடைத்தவுடன், தனுஷ்கோடியில் சுற்றுலாத்துறை சார்பில் சுற்றுலா பயணிகளுக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும்,” என்றார்.



# நத்தம் அருகே பூசாரிபட்டியில் சமத்துவ மீன்பிடி திருவிழா

நத்தம், மே.19-

நத்தம் அருகே பூசாரிபட்டியில் கிராம மக்கள் பங்கேற்ற மீன் பிடி திருவிழா நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகே சிறுகுடி ஊராட்சிக்கு உட்பட்ட பூசாரிபட்டியில் 50 ஏக்கர் பரப்பளவில் தாமரை கண்மாய் உள்ளது. இங்கு ஆண்டுதோறும் கண்மாயில் நீர் வற்றியவுடன் ஊர் சார்பில் கண்மாயில் சமத்துவ மீன் பிடி திருவிழா நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு கண்மாயில் நீர் இருப்பு குறைந்த நிலையில் மீன் பிடி திருவிழா நடத்த கிராமமக்கள் ஏற்பாடு செய்தனர்.

முன்னதாக மீன் பிடி திருவிழாவில் பங்கேற்க சுற்றுப்புற கிராம மக்களுக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டது. இதையடுத்து சிறுகுடி, பூசாரிபட்டி, நல்லகண்டம், இந்திராநகர், புதுப்பட்டி, லட்சுமிபுரம், தேத்தாம்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, குப்பப்பட்டி, ஒடுகம்பட்டி, எட்டயம்பட்டி, அணை மலைப்பட்டி உள்ளிட்ட 18 பட்டி கிராம மக்கள் கண்மாய் கரையில் திரண்டனர்.

ஒரே நேரத்தில் ஒற்றுமையாக கண்மாயில் இறங்கி மக்கள் தாங்கள் கொண்டு வந்திருந்த கச்சா, வலை, கூடை மற்றும் ஊத்தா மீன் பிடி கூடைகளை கொண்டு மீன்களை பிடித்தனர். இதில் ஜிலேபி, குரவை, ரோகு உள்ளிட்ட பல்வேறு வகையான மீன்கள் கிடைத்தது. கண்மாயில் இறங்கி மீன் பிடித்த மக்கள் ஒவ்வொருக்கும் 2 கிலோ முதல் 5 கிலோ எடை வரை மீன்கள் கிடைத்தது. கிடைத்த மீன்களை பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் தங்கள் வீடுகளுக்கு எடுத்துச்சென்று சமைத்து உண்டனர்.



# அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு நிலுவைத் தொகையுடன் அகவிலைப்படி உயர்வு

## மே மாத சம்பளத்தோடு வழங்க உத்தரவு

சென்னை, மே.19-

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நிலுவைத்தொகையுடன் அகவிலைப்படி உயர்வை மே மாத சம்பளத்தோடு வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஜனவரி முதல் 2 சதவீத அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும் என சட்டப்பேரவையில் முதல்வர் அறிவித்தார். இதைத்தொடர்ந்து, அகவிலைப்படி உயர்வு தொடர்பாக நிதித்துறை வெளியிட்ட அரசாணையில், “ஜனவரி 1 முதல் முன்தேதியிட்டு அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும்” தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, அகவிலைப்படி உயர்வு உத்தரவை செயல்படுத்தும் வகையில் அனைத்து சம்பளம் வழங்கும் அலுவலர்கள், கருவூலம் மற்றும் கணக்குத்துறை அதிகாரிகளுக்கு அத்துறையின் இயக்குநர் டி.சாருஸ்ரீ அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் “அகவிலைப்படி உயர்வுக்கான நிலுவைத்தொகை பட்டியலை மே மாதத்தின் ஊதிய பட்டியலுடன் இணைத்து அனுப்பிவிடலாம். அதை சம்பந்தப்பட்ட கருவூலம் மற்றும் கணக்குத்துறை அதிகாரிகள் ஏற்றுக்கொண்டு அகவிலைப்படி உயர்வு நிலுவைத்தொகையுடன் ஊதியம் வழங்கலாம்'' என குறிப்பிட்டுள்ளனர்.

இதன்மூலம் 8 லட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர்.

# வெளிநாடுகளுக்கு ‘அமைதிக் குழு’; இந்தியா அறிவித்த நிலையில் பாகிஸ்தானும் ஏற்பாடு

இஸ்லாமாபாத், மே.19-

பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து விளக்குவதற்காக முக்கிய நட்பு நாடுகளுக்கு 7 எம்.பி.க்கள் கொண்ட குழுக்களை இந்தியா அனுப்பவுள்ள நிலையில், பாகிஸ்தானும் அமைதிக்கான தனது தரப்பு நிலைப்பாட்டை விளக்கும் குழுவை உலக நாடுகளுக்கு அனுப்ப இருக்கிறது.

முன்னதாக, பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் (பிபிபி) பிலாவல் பூட்டோ சர்தாரி, இந்தியா பாகிஸ்தான் இடையே சமீபத்தில் உருவாகியிருக்கும் பதற்றங்களுக்கு மத்தியில் பாகிஸ்தானின் நிலைப்பாட்டை விளக்க ஒரு குழுவினை வழிநடத்துவதற்கு பாகிஸ்தான் பிரதமர் ஷெரிஃப் தன்னைக் கேட்டுக் கொண்டதாக தெரிவித்திருந்திருந்தார். அதனைத் தொடர்ந்து இந்த விஷயம் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து சர்தாரி தனது முகநூல் பக்கத்தில் வெளியிட்டிருந்த பதிவில், “இன்று பிரதமர் ஷெபாஸ் ஷெரிஃப் என்னை அழைத்து அமைதிக்கான பாகிஸ்தான் தரப்பு முயற்சிகளை உலக அரங்கில் விளக்குவதற்கான குழுவினை வழிநடத்துமாறு என்னைக் கேட்டுக்கொண்டார். இந்த



இக்கட்டான நேரத்தில் இந்த சவாலான பணியினை ஏற்றுக்கொள்வதையும், தேசத்துக்கு சேவையாற்றுவதையும் பெருமையாக கருதுகிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கிறது என்ற குற்றச்சாட்டினை எதிர்கொண்டுவரும் பாகிஸ்தான் தனது நற்பெயரை சரிசெய்வதற்கான முயற்சியாக இந்த அறிவிப்பு பார்க்கப்படுகிறது.

பயங்கரவாதத்தை கட்டுப்படுத்த தவறியதாலும், பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் 9 பயங்கரவாத நிலைகளைக் குறிவைத்து தாக்கிய இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூருக்கு பதிலடியாக பொதுமக்களை குறிவைத்து தாக்கி நம்பகத்தன்மையை குறைத்துக் கொண்டதாலும், சர்தாரியின் குழு ஒரு பெரும் சவாலை சந்திக்க வேண்டி இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

முன்னதாக சனிக்கிழமை, அனைத்துக் கட்சி குழு குறித்த அறிவிப்பைப் பகிர்ந்துகொண்ட நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, “மிக முக்கியமான தருணங்களில், பாரதம் ஒற்றுமையாக உள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத் தன்மை என்ற செய்தியை எடுத்துச் செல்லும் ஏழு அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் விரைவில் முக்கிய கூட்டாளி நாடுகளுக்குச் செல்வார்கள். வேறுபாடுகளுக்கு அப்பால், இது அரசியலுக்கு அப்பாற்பட்ட தேசிய ஒற்றுமையின் சக்திவாய்ந்த பிரதிபலிப்பு.” என்று தெரிவித்திருந்தார்.

பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், முக்கிய அரசியல் பிரமுகர்கள் மற்றும் புகழ்பெற்ற தூதரக அதிகாரிகள் ஒவ்வொரு குழுவிலும் இடம்பெறுவார்கள். பின்வரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழு பிரதிநிதிகள் குழுக்களை வழிநடத்துவார்கள்:

1) சசி தரூர், இந்திய காங்கிரஸ் கட்சி

2) ரவிசங்கர் பிரசாத், பாஜக

3) சஞ்சய் குமார் ஜா, ஜே.டி.யு

4) பைஜயந்த் பாண்டா, பாஜக

5) கனிமொழி கருணாநிதி, தி.மு.க

6) சுப்ரியா சுலே, என்சிபி

7) ஸ்ரீகாந்த் ஏக்நாத் ஷிண்டே, சிவசேனா

# இந்தியா, பாகிஸ்தான் போரை நிறுத்தினேன்; ஆனால் பெயரும் புகழும் கிடைக்கவில்லை: டிரம்ப் வேதனை

புதுடெல்லி, மே.19-

இந்தியா, பாகிஸ்தான் போரை நிறுத்தினேன். ஆனால் அதற்கான பெயரும் புகழும் கிடைக்கவில்லை என்று அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பாக்ஸ் தனியார் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது: மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் மிகப்பெரிய வெற்றியை பெற்றிருக்கிறேன். அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் இடையே பொருளாதார உறவை வலுப்படுத்தி உள்ளேன். என்னைப் பொறுத்தவரை வர்த்தகத்தை ஆயுதமாக பயன்படுத்தி அமைதியை நிலைநாட்டி வருகிறேன்.

அண்மையில் இந்தியா, பாகிஸ்தான் இடையே மிகப்பெரிய போர் வெடித்தது. இரு நாடுகள் இடையே அணு ஆயுத போர் மூளும் அபாயம் எழுந்தது. உடனடியாக இரு நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்காவின் மூத்த அமைச்சர்கள், அதிகாரிகளுக்கு உத்தரவிட்டேன். வர்த்தகத்தை ஆயுதமாக பயன்படுத்தி இந்தியா, பாகிஸ்தான் போரை நிறுத்தினேன். ஆனால் அதற்கான அங்கீகாரம் எனக்கு கிடைக்கவில்லை, பெயரும், புகழும் கிடைக்கவில்லை.

ரஷ்யா, உக்ரைன் போர்: ரஷ்யா, உக்ரைன் இடையே பல ஆண்டுகளாக போர் நடைபெறுகிறது. ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் இந்த போரால் சோர்வடைந்துவிட்டார். வர்த்தகத்தை ஆயுதமாக பயன்படுத்தி ரஷ்யா, உக்ரைன் இடையே அமைதியை ஏற்படுத்த முடியும் என்று உறுதியாக நம்புகிறேன்.

அமெரிக்கா, ஈரான் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இதிலும் வர்த்தகத்தை முன்னிறுத்தி நல்ல தீர்வை எட்ட முயற்சி செய்வேன். ஈரானிடம் அணு ஆயுதங்கள் இருக்கக் கூடாது என்பதில் அமெரிக்கா மிகவும் உறுதியாக இருக்கிறது. சிரியாவில் ஆட்சி நடத்தும் புதிய அரசு மாற்றத்தை விரும்புகிறது. இதன்காரணமாக அந்த நாட்டின் மீதான தடைகளை நீக்கி உள்ளேன்.

அமெரிக்க அதிபர் தேர்தல் பிரச்சாரத்தின்போது இருமுறை என்னை கொலை செய்ய முயற்சிகள் நடைபெற்றன. இது தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த விசாரணையில் முக்கிய தகவல்கள், ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அவற்றை இப்போதைக்கு பகிரங்கமாக வெளியிட முடியாது. இவ்வாறு அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்

# ஓஎம்ஆர் சாலையில் ஏற்பட்ட திடீர் பள்ளத்தில் கார் கவிழ்ந்து விபத்து உயிர் தப்பிய குடும்பம்

சென்னை, மே.19–

ஓஎம்ஆர் சாலையில் ஏற்பட்ட திடீர் பள்ளத்தில் கார் கவிழ்ந்து விபத்தில் சிக்கியது. இதில், காருக்குள் இருந்த ஐ.டி. ஊழியர் குடும்பத்துடன் உயிர் தப்பினார்.

சோழிங்கநல்லூரில் இருந்து சென்ட்ரல் ரயில் நிலையம் நோக்கி நேற்று மாலை கார் ஒன்று சென்று கொண்டிருந்தது. அந்த வாடகை காரில் சோழிங்கநல்லூரை சேர்ந்த ஐ.டி. ஊழியரான விக்னேஷ் (45) என்பவர் மனைவி தன்யா (40) மற்றும் குடும்பத்தினர் அக்ஷயா (12). அத்வைத் (9) ஆகியோர் பயணித்தனர். காரை மரியதாஸ் (47) என்பவர் ஓட்டினார்.

டைடல் பார்க் சந்திப்பு ஓஎம் ஆர் சாலையில் (இந்திரா நகர் ரயில் நிலையம் அருகே) சென்று கொண்டிருந்த போது. திடீரென் சாலை நடுவே சுமார் 10 அடி ஆழத்துக்கு திடீர் பள்ளம் ஏற்பட்டது. இந்த பள்ளத்துக்குள் கார் கவிழ்ந்து விபத்தில் சிக்கியது. காருக்குள் இருந்த 5 பேரும் கூச்சலிட்டனர். தகவல் அறிந்து தரமணி போலீஸார். போக்குவரத்து போலீஸார்



மற்றும் தீயணைப்பு படை வீரர்கள் விரைந்து வந்தனர்.

கிரேன் மூலம் காரை தூக்கி அப்புறப்படுத்தினர். காருக்குள் இருந்த 5 பேரும் கண்ணாடியை உடைத்து அடுத்தடுத்து மீட்கப்பட்டனர். விபத்தில் கார் ஓட்டுநர் மரியதாசுக்கு உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது. மற்றவர்கள் லேசான காயத்துடன் உயிர் தப்பினர். அனைவரும் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதனிடையே, சாலையில் ஏற்பட்ட பள்ளத்தை சுற்றி தடுப்பு வேலிகள் போடப்பட்டது. இதனால், அந்த பகுதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. திடீர் பள்ளத்துக்கான காரணம் என்ன என்று தரமணி போலீஸார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

திடீர் பள்ளம் தொடர்பாக சென்னை குடிநீர் வாரிய அதிகாரிகள் கூறும்போது, “விபத்து ஏற்பட்ட பகுதியில் 2.2 மீ விட்டம் கொண்ட ராட்சத கழிவு நீர் குழாய் செல்கிறது. இந்த குழாய் வழியாகத்தான் அடையாறு உள்ளிட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவுநீர் பெருங்குடியில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு கொண்டு செல்லப்படுகிறது. அந்த இடத்தில் பள்ளம் ஏற்பட்டதற்கான காரணம் குறித்து உயர் அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்” என்றனர்.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், ”மெட்ரோ ரயில் பணி நடைபெறும் இடத்தில் இருந்து சுமார் 300 மீட்டர் தொலைவில் திருவான்மியூர் தரமணி இடையே பள்ளம் ஏற்பட்டுள்ளது. இந்த பள்ளம், மெட்ரோ ரயில் நிர்வாகத்தின் எந்த பணியுடனும் தொடர்புடையது அல்ல என்பதை உறுதி செய்கிறோம். அந்த பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 2.2 மீ விட்டம் கொண்ட கழிவுநீர் குழாயில் ஏற்பட்ட கசிவு காரணமாக. பள்ளம் ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது என கூறப்பட்டுள்ளது.

# பல்லாவரம் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் நீர்மோர் பந்தல் திறப்பு விழா



பல்லாவரம், மே.19-
செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அறிவுறுதுதலின்படி கோடை வெய்யிலின் தாகம் தீர்க்க நீர்மோர் பந்தல் திறப்பு விழா 15வது மாமன்ற உறுப்பினர் 15வது வட்ட கழகச் செயலாளர் டி.வி.ராஜா என்கின்ற ராஜேந்திரன் தலைமையில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் டி.வி.ஆர் கௌதம் பாபு ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகராட்சி 2வது மண்டல குழு தலைவர், பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை கலந்துகொண்டு பொதுமக்களுக்கு நீர் மோர் பந்தலை திறந்து வைத்து தாகம் தீர்க்க தர்பூசணி இளநீர் குளிர்பானங்கள் உள்ளிட்ட பொருட்களை வழங்கினார்கள் இந்த நிகழ்ச்சியில் பகுதி கழகச் செயலாளர் இ.எஸ். பெர்னாட், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன், மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ. சத்திய பிரபு, மாணவர் இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.இன்சமாம், பகுதி இளைஞரணிகள் அமைப்பாளர் சரத் வெங்கடேசன் மற்றும் முரசொலி ராஜன், 15வது வார்டு இளைஞர் அணி செயலாளர் எஸ்.சரவண பாலன் திமுக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




# தாம்பரம் மேற்கு பகுதி திமுக சார்பில் சாதனை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது

தாம்பரம், மே.19-
தாம்பரம் மாநகரம் தாம்பரம் மேற்கு பகுதி திமுக சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு கழக ஆட்சியின் சாதனை விழாக்க பொதுக்கூட்டம் திலகவதி நகர் சந்திப்பு பழைய ஜிஎஸ்டி ரோடு இரும்புலியூர் பகுதி கழகச் செயலாளர் ஐந்தாவது மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, தலைமை கழக பேச்சாளர் த.ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். உடன் மேயர் க.வசந்தகுமாரி, பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் நான்காவது மண்டல குழு தலைவர் டி.காமராஜ், இரா.சுரேஷ், தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் இளம்சுருதி, மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். கோபி, வி.முனுசாமி, கிவேலுமணி, எஸ்.ஜி.கருணாகரன், ரமணி ஆதிமூலம், பி.ஜோதிகுமார், செ.சுரேஷ் உள்ளிட்ட மாவட்ட மாநகர பகுதி வட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




# தாம்பரம் மாநகர திமுக சார்பில் தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குசாவடி நிலை முகவர்கள் (பிஎல்ஏ2) ஆலோசனைக் கூட்டம்

பெருங்களத்தூர், மே.19-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர திமுக சார்பில் தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குசாவடி நிலை முகவர்கள் (BLA-2) ஆலோசனைக் கூட்டம் தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா தலைமையில் பெருங்களத்தூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர் எஸ்.சேகர் வரவேற்பிலும் மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை கோ.காமராஜ், பகுதி கழகச் செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், இரா.சுரேஷ், ஆ.நடராஜ், புனித தோமையர் மலை வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் வி.கே.ரவி ஆகியோர் முன்னிலையில் இதில் சிறப்பு அழைப்பாளராக கழகப் பொருளாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமை தீர்மான குழு செயலாளர் மீ.அ.பைத்தியலிங்கம், தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதி இளம் சுருதி ஆகியோர் கலந்து கொண்டு எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்கள் இந்த நிகழ்ச்சியில் விஜயரங்கன், நரேஷ் கண்ணா, சதாசிவம், ஆதிமாறன், தேவேந்திரன், ஆர்.எஸ். ஷங்கர், வேல்முருகன், ஜெகதீஸ்வரன், ஜனனி சுரேஷ்பாபு, ரமணி ஆதி மூலம், சத்ய பிரபு, வி.கார்த்திக், சிவசுப்பிரமணியன், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, வட்ட கழக செயலாளர், கழக நிர்வாகிகள், வாக்கு சாவடி நிலை முகவர்கள் பிஎல்ஏ 2 இளைஞரணி, மாணவரணி, மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இறுதியில் பகுதி கழகத் துணைச் செயலாளர் பி.புகழேந்தி நன்றி உரையாற்றினார்

# கொடைக்கானல் ரோஸ் பூங்காவை நேரில் பார்வையிட்ட திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் சரவணன் ரோஸ் கார்டனின் அழகை மேம்படுத்துவதற்கு அறிகுறிகள் வழங்கி உள்ளார்



திண்டுக்கல், மே.19-
திண்டுக்கல் மாவட்டம் மலைகளின் இளவரசி என அழைக்கப்படும் கொடைக்கானலில் அமைந்துள்ள இயற்கை எழில்களை ரசிப்பதற்காகவும் கால சூழ்நிலைகளை அனுபவிப்பதற்காகவும் வருடம் தோறும் மாதம் தோறும் வாரம் தோறும் அதிகளவு சுற்றுலா பயணிகள் வந்து செல்வது வழக்கமாக உள்ளது.

கொடைக்கானலை சுற்றிப் பார்ப்பதற்காக பல்வேறு சுற்றுலா தளங்கள் இருப்பினும் திண்டுக்கல் மாவட்ட நிர்வாகம் கொடைக்கானல் பகுதியில் மேலும் சுற்றுலா பயணிகள் ரசிப்பதற்கு சுற்றுலா தளங்களில் பல்வேறு முன்னேற்பாடுகள் மற்றும் சுற்றுலா பயணிகள் கவரும் வகையில் சுற்றுலா தளங்களை மெருகேற்றும் விதமாக புதிய ஏற்பாடுகள் செய்வதற்கு மாவட்ட ஆட்சியர் சரவணன் பல்வேறு முடிவுகள் எடுத்து வருகின்றார்.

இந்நிலையில் கொடைக்கானல் பகுதியில் 10 ஏக்கர் பரப்பில் ரோஸ் கார்டன் அமைக்கப்பட்டுள்ள பகுதியை நேருவில் ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர் சரவணன் ரோஸ் கார்டன் பகுதியில் புதிதாக அமைக்கப்படும் இருக்கும் இடங்களை ஆய்வு மேற்கொண்டு.

மேலும் ரோஸ் கார்டன் பகுதிகளில் கூடுதலாக செல்பி பாயிண்ட் மற்றும் விழா நிகழ்ச்சி நடைபெறும் மேடையை பார்வையிட்டு வந்தார்.

இதனைத் தொடர்ந்து கொடைக்கானல் பிரைன் பூங்காவில் நடைபெற உள்ள 62 ஆவது மலர் கண்காட்சி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு வருகிறார்

அதனை தொடர்ந்து 24 .05.25 அன்று முதல் மலர் கண்காட்சி மற்றும் கோடை விழா தொடங்கும் என்றும் கோடைவிழாவனது 9 நாட்கள் நடை பெற உள்ளதாகவும் தெரிவித்தார்

மேலும் பெப்பர் அருவி 100 கட்டணத்துடன் பாதுகாக்கப் அம்சங்களுடன் நடைபெற்று வருவதாக தெரிவித்தார் . அதனை தொடர்ந்து மேலும் 5 அருவி ஆய்வில் உள்ளதாகவும் விரைவில் திறக்க படவுள்ளதாகவும் தெரிவித்தார்.



■ காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளியில், பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவிகள் எஸ்.அனு பாரதி 487/500, கே ஜெயஸ்ரீ (486/500), R. வைஷ்ணவி (478/500) அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தரும், அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளியின் பள்ளி குழு தலைவர் பேராசிரியர் க. ரவி மற்றும் அழகப்பா பல்கலைக்கழக பதிவாளரும், அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளியின் பள்ளிக்குழு செயலர் பேராசிரியர் அ.செந்தில் ராஜன் ஆகியோரை சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ராஜபாண்டியன் மற்றும் உதவி தலைமை ஆசிரியர் ரமேஷ். ஆறு மாணவர்கள் அறிவியல் மற்றும் சமூக அறிவியல் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



■ சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகராட்சியின் மேயர் சே.முத்துத்துரை TNPID நீதிமன்றத்தில் தமிழக அரசு சிறப்பு குற்றவியல் வழக்கறிஞராக சிவகங்கை, தஞ்சாவூர், தென்காசி மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட காரைக்குடி மாநகராட்சி வழக்கறிஞர் ஆர்.ராஜபாண்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.



# சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அஇஅதிமுக சார்பில் திமுக அரசை கண்டித்து துண்டு பிரசாரங்கள் பொதுமக்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி

சிவகங்கை, மே.19-
சிவகங்கை மாவட்டம் காரை க்குடியில் அஇஅதிமுக சார்பில் திமுக அரசை கண்டித்து துண்டு பிரசாரங்கள் பொதுமக்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் செந்தில்நாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில், உன்னால் வருவாய் துறை அமைச்சர் ஆர் பி உதயகுமார் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கழக அமைப்பு செயலாளர் ஏ கே சீனிவாசன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் இளங்கோவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே கே உமாதேவன், கற்பகம் இளங்கோ, நாகராஜ், குணசேகரன், மாவட்ட இலக்கிய அணி செயலாளர் சின்னதுரை, தேவகோட்டை நகர மன்ற தலைவர் சுந்தரலிங்கம், மாமன்ற உறுப்பினர்கள் தேவன் மற்றும் பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு பொது மக்களுக்கும் வியாபாரிகளுக்கும் துண்டு பிரசுரங்களை வழங்கினர்.

# பள்ளி மாணவர்களுக்கான கோடைக் கொண்டாட்ட சிறப்பு பயிற்சி முகாம்

சென்னை, மே.19-
பள்ளி மாணவமாணவிகளுக்கான கோடைக் கொண்டாட்ட சிறப்பு பயிற்சி முகாம்கள் இந்த மாத கடைசி வாரத்தில் நடைபெறவுள்ளதாக பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் கண்ணப்பன் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கை விவரம்: பள்ளி மாணவர்களின் தனித்திறன்களை மெருகேற்றும் வகையிலும், கோடை விடுமுறையை பயனுள்ள வகையில் செலவழிக்கவும் கோடைக் கொண்டாட்ட சிறப்பு பயிற்சி முகாம்கள் நீலகிரி, சேலம் (ஏற்காடு) ஆகிய மாவட்டங்களில் இரு பிரிவுகளாக 5 நாள்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த முகாம்களுக்கு அரசுப் பள்ளிகளில் பிளஸ் 1 வகுப்பை நிறைவு செய்துள்ள மாணவர்களில் கல்வி, இலக்கியம், விளையாட்டு, அறிவியல், விநாடிவினா போட்டியில் சிறந்து விளங்கிய 1,500 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். சிறப்பு பயிற்சி முகாமில் பங்கேற்பவருக்கு பெற்றோர் களின் ஒப்புதல் கடிதம் அவசியம். இதில் கலந்து கொள்ளும் மாணவர்கள் தங்களுக்குத் தேவையான உடைமைகள், அடையாள அட்டை போன்றவற்றை தவறாமல் கொண்டுவர வேண்டும். மாணவிகளை அழைத்துச் செல்லும் போது கட்டாயம் 20 பேருக்கு பெண் ஆசிரியர் ஒருவரை அனுமதிக்க வேண்டும். முகாம் நடைபெறும் நாள், இடம் பின்னர் தெரிவிக்கப்படும். பயிலரங்கச் செயல்பாடுகள், பயிற்சிக்கான கால அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இந்திய ரயில்வேயின் முதன் முயற்சி; இயற்கை அழகை ரசிக்க 'விஸ்டாடோம்' ரயில் சேவை: உத்தரபிரதேசத்தில் தொடங்கியது



லக்னோ, மே.19-
இந்திய ரயில்வேயின் முதன் முயற்சியாக இயற்கை அழகை ரசிக்க வைக்கும் 'விஸ்டாடோம்' ரயில் சேவை உத்தரபிரதேசத்தில் தொடங்கப்பட்டுள்ளது. உத்தரப் பிரதேச மாநிலம் துத்வா தேசியப் பூங்காவின் 109 கிலோமீட்டர் தூரத்தை கடந்து செல்லும் வகையில் 'விஸ்டாடோம் கோச்' ரயில் போக்குவரத்தை நேற்று ரயில்வே நிர்வாகம் அறிமுகப்படுத்தியது. இந்த ரயிலில் செல்லும் பயணிகள் வனப்பகுதியின் இயற்கை அழகை ரசித்துவாறு செல்லலாம். அதற்கேற்றவாறு ரயில் பெட்டிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. கண்ணாடி கூரையுடன் கூடிய விஸ்டாடோம் பெட்டிகள், பயணிகளுக்கு வனப்பகுதியின் இயற்கை அழகையும், வனவிலங்குகளையும் எவ்வித இடையூமின்றி கண்டு ரசிக்க முடியும்.

இந்த ரயில் போக்குவரத்து முயற்சியானது, உள்ளூர் சுற்றுலாவை மேம்படுத்துவதுடன், மாநிலத்தின் பொருளாதாரத்தையும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ரயில் சேவை, துத்வா தேசியப் பூங்காவின் புலிகள், மான்கள், பறவைகள் மற்றும் அடர்ந்த பசுமையை ரசிக்க விரும்பும் சுற்றுலாப் பயணிகளுக்கு தனித்துவமான அனுபவத்தை வழங்குகிறது. விஸ்டாடோம் ரயிலில் வசதியான இருக்கைகள், பெரிய ஜன்னல்கள் மற்றும் குளிர்சாதன வசதிகள் உள்ளன.

குடும்பத்தினரும் செல்லும் சுற்றுலா பயணிகளுக்கும், இயற்கை ஆர்வலர்களுக்கும் ஏற்றதாக உள்ளது. இந்த சேவையை இந்திய ரயில்வே மற்றும் உத்தரப் பிரதேச சுற்றுலாத் துறை இணைந்து அறிமுகப்படுத்தியுள்ளன. மேலும் உலகளாவிய சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'விஸ்டாடோம்' ரயிலில்ஞ்

'விஸ்டாடோம்' ரயில் பயணம் என்பது வனப்பகுதிகள் மற்றும் இயற்கை எழில் கொஞ்சும் பகுதிகளில் பயணிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ரயிலில் பயன்படுத்தப்படும் விஸ்டாடோம் பெட்டிகளானது, கண்ணாடி கூரை, பெரிய ஜன்னல்கள் மற்றும் 360 டிகிரி காட்சியை வழங்கும் வசதிகளைக் கொண்டவை. இதனால், பயணிகள் வனத்தின் இயற்கை அழகு, வனவிலங்குகள் மற்றும் பசுமையான சூழலை முழுமையாக ரசிக்க முடியும்.

புகைப்படம் எடுப்பதற்கும் இயற்கையை ரசிப்பதற்கும் ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. குளிர்சாதன வசதி, வசதியான இருக்கைகள், சுழலும் இருக்கைகள் (சில பெட்டிகளில்), உணவு வசதிகள் மற்றும் சுத்தமான கழிவறைகள் உள்ளன. மொத்தத்தில், விஸ்டாடோம் காட்டுச் சவாரி என்பது இயற்கையை நவீன வசதிகளுடன் அனுபவிக்க விரும்புவோருக்கு தனித்துவமான பயண அனுபவத்தை வழங்கும் முயற்சியாகும்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161